ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## பெரிய திருமலை நம்பி - வைகாசி - ஸ்வாதி
## (ஸ்வாமி எம்பெருமானாருக்கு மாமா)

### தனியன்

ஸ்ரீமல் லசஷ்மண யோகீந்த்ர ஸ்ரீராமாயண தேஸிகம் /
ஸ்ரீஸைலபூர்ணம் விருஷப ஸ்வாதி ஸஞ்ஜாத மாஸ்ரயே //

பிதாமஹஸ்யாபி பிதாமஹாய ப்ராசேதஸாதே ஸபலப்ரதாய /
ஸ்ரீபாஷ்யகாரோத்தமதேஸிகாய ஸ்ரீஸைலபூர்ணாய நமோ நம:ஸ்தாத் //

### இவருடைய பெருமை (தனியனின் விளக்கம்)

பிரமனுக்குத் தந்தையான திருவேங்கடமுடையானாலே அப்பா என்று கூப்பிடப் பெறுகையாலே, உலகிற்குப் பாட்டனான பிரமனுக்கும் பாட்டனாராய், ஸ்ரீபாஷ்யகாரருக்குச் சிறந்த ஆசாரியராய் அவருக்கு வால்மீகியின் வாக்காகிற ஸ்ரீராமாயணத்தின் பொருளை உபதேசித்தவரான பெரிய திருமலைநம்பிக்குப் பலகால் வணக்கம்.

### வாழித்திருநாமம்

வைகாசிச் சோதிநாள் வந்துதித்தான் வாழியே
வண்திருவேங்கடமுடையான் வரபுத்திரன் வாழியே
அய்யன் ஸ்ரீஆளவந்தார் அடிதொழுவோன் வாழியே
அனவரதம் மலைகுனியர்க்கு அடிமைசெய்வோன் வாழியே
மெய்யனிரமானுஜசாரியன் விரும்புமவன் வாழியே
மிக்க திருமலையார்க்கெல்லாம் மேலாவான் வாழியே
செய்ய தமிழ் வேதத்தின் சிறப்பறிந்தோன் வாழியே
திருமலைநம்பிகள் உபய திருவடிகள் வாழியே.

திருஅவதாரஸ்தலம் - திருமலை
திருநாமம் - ஸ்ரீசைலபூர்ணர், பெரியதிருமலை நம்பி
ஆசாரியன் - ஆளவந்தார்
சிஷ்யர் - எம்பெருமானார்
திருக்குமாரர் - பிள்ளை திருமலைநம்பி, ராமானுஜன், திருக்குருகைப்பிரான் பிள்ளான்
திருகுமாரத்திகள் - அலர்மேல் மங்கை (இரண்டாவது குமாரத்தியின் பெயர் தெரியவில்லை)
சகோதரிகள் - பூதேவி என்னும் காந்திமதி, ஸ்ரீதேவி
மருமக்கள் - எம்பெருமானார், எம்பார், சிறிய கோவிந்தப்பெருமாள்
திருவேங்கடமுடையானுக்குத் திருத்தகப்பனார்
திருமலையார்க்கெல்லாம் கூடஸ்தர்

## பெரிய திருமலை நம்பி வைபவச் சுருக்கம்

இவர் நித்யசூரிகளில் ஒருவரான `சுமுகர்' அம்சமாக அவதரித்தார். இவர் திருவேங்கடமுடையானுக்கு தினமும் பாபாநாசத்திலிருந்து திருமஞ்ன தீர்த்தம் கொண்டு வந்தும், பூஷ்ப கைங்கர்யங்கள் செய்தும் வந்தார். இவர் தன்னுடைய முதல் சகோதரி பூதேவி என்னும் காந்திமதியை ஸ்ரீபெரும்பூதூர் ஆசூரி வம்சத்தாரான கேசவ சோமயாஜி என்பவருக்கும், இரண்டாவது சகோதரி ஸ்ரீதேவியை மதுரமங்கலம் கமல நயநபட்டருக்கும் திருக்கல்யாணம் செய்து வைத்தார். பெரிய திருமலை நம்பி தன் மகள் அலர்மேல் மங்கையை அலங்கார வேங்கடவர்க்கு (அருளாளப்பெருமாள் எம்பெருமானாரின் திருக்குமாரர்) திருக்கல்யாணம் செய்து வைத்தார்.

முதல் சகோதரியின் மகனுக்கு இளையாழ்வார் என்றும், இரண்டாவது சகோதரியின் முதல் மகனுக்கு கோவிந்தர் (பின்னர் எம்பார் என்று அழைக்கப்பட்டார்) என்றும், இரண்டாவது மகனுக்கு சிறிய கோவிந்தப்பெருமாள் என்றும், இவர் பேரக்குழந்தைக்கு தாதாச்சாரியர் (அலங்கார வேங்கடவர் திருக்குமாரர்) என்றும் பெயர்.

## திருமலைநம்பி அருளியுள்ள அமலனாதிபிரான் தனியன்

காட்டவே கண்டபாத கமலம் நல்லாடை உந்தி
தேட்டரும் உதரபந்தம் திருமார்வு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி முனி ஏறித் தனிபுகுந்து
பாட்டினால் கண்டு வாழும் பாணர் தாள் பரவினோமே.

## திருமலை நம்பியின் பணிவு

இராமானுஜர் திருமலைக்கு எழுந்தருளினபோது, நம்பி அவரை பூர்ண கும்பத்துடனும், சகல மரியாதைகளுடனும் எதிர் கொண்டழைத்தார். `பெரியவரான தேவரீர் இதற்காக வந்தது சரியோ, சிறியவர் யாரையாவது அனுப்பியிருக்கக்கூடாதோ' என்று இராமானுஜர் கேட்க, அதற்கு நம்பிகள் `திருமலையில் அடியேனை விடச் சிறியவர்கள் யாருமில்லை' என்று விநயத்தோடு பதில் அளித்தார்.

## பெரியதிருமலை நம்பிகள் செய்த கைங்கர்யங்கள்

1) பெரிய திருமலை நம்பிகள் சைவராக மாறிய கோவிந்த பட்டரை (எம்பாரை) காளஹஸ்தி சென்று திருத்திப் பணிகொண்டு ஸ்ரீவைஷ்ணவராக்கினார்.

2) இவர் இராமானுஜருக்கு கீழ்திருப்பதியில் ஒருவருட காலம் இராமாயணத்தின் அர்த்த விசேஷங்களைச் சொன்னார். இராமாயண காலசேஷபம் முடிந்த பிறகு இராமானுஜரின் வேண்டுகோளின்படி, கோவிந்த பட்டரையும் அவருடன் சேர்த்து அனுப்பினார்.

3) இவர் தம்முடைய குமாரர்கள், பிள்ளை திருமலைநம்பியையும், இராமானுஜனையும் எம்பெருமானாரிடத்தில் ஆச்ரியக்கச் செய்தார். இவர்கள் எம்பெருமானார் ஏற்படுத்திய 74 சிம்மாசனாதிகளில் இடம் பெற்று இருந்தனர்.

4) பெரிய திருமலை நம்பிக்கு பிள்ளைதிருமலை நம்பி, ராமானுஜன், பிள்ளான் என மூன்று குமாரார்கள். எம்பெருமானார் தம்மிடம் கோவிந்தரை (எம்பாரை) யாசித்துப் பெற்றபோது பெரிய திருமலை நம்பி தம் குமாராரான பிள்ளானை அபிமான புத்திரராக வைத்துக்கொள்ளும்படி யதிராஜரிடம் அளித்தார். அவரும் பிள்ளானிடம் பேரபிமானம் கொண்டவராய்த் தமக்கு அவரை ஜ்ஞாநபுத்திரராகக் கொண்டு அவரைத் திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி வ்யாக்யானம் செய்யும்படி நியமித்தார். நம்மாழ்வாருக்கும் தமது திருக்கோட்டியூர் நம்பிக்கும் திருநாமமான திருக்குருகைப்பிரான் என்னும் திருநாமத்தை பிள்ளானுக்கு சாற்றி திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்று அவரை அழைத்தார்.

<u>பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளியுள்ள வார்த்தாமாலை</u>
<u>441 d வார்த்தையும் விவரணமும்</u>

வித்தாகும் காய் பிஞ்சிலே தெரியும் என்றார் பெரிய திருமலைநம்பி.

விவரணம்

பலமரங்களுக்கு மூலகாரணமாயிருக்கும் விதைக்காயைப் பிஞ்சிலேயே கண்டு பிடித்துவிடலாம். அதுபோலவே உலகம் வாழவந்தவர் எம்பெருமானார் என்பதை அவருடைய சிறு வயதிலேயே நாங்கள் கண்டு விட்டோம் என்று கருத்து.

யதிராஜ வைபவத்தில் இவர் வைபவத்தின் விரிவைக் காணலாம்.

மேலே சொன்ன விஷயங்கள் புத்தூர் ஸ்வாமி வெளியிட்டுள்ள ஆசார்ய வைபவமஞ்ஜரி நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

பெரிய திருமலை நம்பி திருவடிகளே சரணம்

வாசிக தோஷ: சஷந்தவ்ய: